பக்கங்கள் 18+6

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 07 புதன்கிழமை 21.01.2026 | அதிர்வு 175

### எல்லை தாண்டி மீன்பிடித்த 7 இந்திய மீனவர்களுக்கும் பெப்ரவரி 3 வரை மறியல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்புக்கு அருகில் நேற்று மாலை எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் ஏழு இந்திய மீனவர்கள் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அநுர ஆட்சியில் பாதுகாப்பு உறுதி; வடக்கில் முதலீடு செய்ய வாருங்கள்!



## ஆளுநர் வேதநாயகன் அழைப்பு

"கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் முதலீடுகளைச் செய்ய வந்தவர்கள், சாதக மற்ற சூழல் காரணமாகத் திரும்பிச் சென்றதே வரலாறாக இருந்தது. ஆனால், தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில் முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழல் உருவாகியிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் 'வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு - 2026' நடைபெறுகின்றமை மிகப் பொருத்தமானது. 03

# சுவிஸில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உயர்மட்ட இராஜதந்திர சந்திப்புகளில்






சுவிட்சர்லாந்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அங்கு உயர்மட்ட இராஜதந்திர சந்திப்புகளில் ஈடுபட்டு வருகின்றார்.

உலகத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் அவர் பேச்சு நடத்தி வருகின்றார்.

அந்தவகையில் சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினத்துடன் இரு தரப்பு கலந்துரையாடலில் பிரதமர் ஈடுபட்டார்.

இதன்போது டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கைக்குச் சிங்கப்பூர் வழங்கிய உதவிகளுக்காகப் 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சுவிஸில் பிரதமர்...**

பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என்றும் பிரதமர் கூறினார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவையும் பிரதமர் சந்தித்து, இரு தரப்பு பேச்சு நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடல்களில் தொழில் அமைச்சரும் நிதி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோவும் பங்கேற்றார்.

மேலும் சில சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் பிரதமர் கலந்துரையாடினார்.

சுவிஸில் நடைபெறும் உலக பொருளாதாரமன்ற மாநாட்டில் பங்கேற்க வருகை தந்துள்ள மேலும் சில நாடுகளின் தலைவர்களை அவர் இன்று சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 23 அல்லது 24 ஆம் திகதியளவிலேயே பிரதமர் நாடு திரும்புவார் என அறியமுடிகின்றது.
















**7 இந்திய மீனவர்களுக்கும்...**

கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், மேற்படி மீனவர்கள் பயணித்த இரண்டு மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



எல்லை தாண்டிய மீன்பிடிச் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கிடையே தொடர்ச்சியாகப் பிரச்சினைகள் எழுந்து வரும் நிலையில், இந்தச் சம்பவம் மீண்டும் கவனம் பெற்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி



**அநுர ஆட்சியில்...**

இதனைப் பயன்படுத்திக் கொண்டு, தேசிய மொத்த உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வரலாற்றில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட ‘வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு – 2026’ யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை மிகப் பிரமாண்டமாக ஆரம்பமானது. இந்த மாநாட்டை ‘த மனேஜ்மன்ட் கிளப்’ – இலங்கை ஒழுங்கமைத்திருந்தது.

மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர்,

“வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் மாநகரில் நடைபெறும் இந்த நிகழ்வானது வெறும் ஒரு மாநாடு மட்டுமல்ல, வடக்கு மாகாணத்தின் ஒரு தீர்க்கமான மற்றும் மூலோபாயத் திருப்புமுனையை நாம் அனைவரும் ஒன்றுகூடிச் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இயற்கை வளங்கள், மீளெழும் வல்லமை கொண்ட மனித மூலதனம் மற்றும் ஆழமான கலாசாரப் பாரம்பரியம் ஆகியவற்றைக் கொண்டுள்ள போதிலும், நீண்ட காலமாக இம்மாகாணம் எமது நாட்டின் தேசிய மொத்த உற்பத்தியில் மிகக் குறைந்தளவான பங்களிப்பையே வழங்கி வந்துள்ளது. இன்று, ‘வளர்ச்சியை வலுவூட்டல், நுண்ணறிவுமிக்க புத்தாக்கங்கள்’ என்ற தொனிப்பொருளின் கீழ், அந்த வரலாற்றை மாற்றியமைக்கும் பணியை நாம் ஆரம்பிக்கின்றோம்.

இலங்கை, பொருளாதார மீட்சியிலிருந்து நீண்டகால நிலையான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கத் தயாராகும் இத்தருணத்தில், இந்நிகழ்வானது மிகச் சரியான நேரத்தில் நடைபெறுகின்றது. எந்தவொரு மாகாணமும் பின்தங்கிவிடக் கூடாது என்ற அடிப்படையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ‘அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம்’ என்ற தூரநோக்குப் பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழேயே இம்முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

எமது வரலாற்றைத் திரும்பிப் பார்க்கையில், வடக்கு மாகாணமானது எப்போதும் ‘சிறப்புக்கான ஒரு நுழைவாயிலாக’ திகழ்ந்து வந்துள்ளது. அந்தப் பெருமையை மீட்டெடுப்பதே இந்த உச்சி மாநாட்டின் நோக்கமாகும்.

விவசாயம் மற்றும் கடற்றொழில், சுற்றுலாத்துறை, கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பம், மற்றும் வலுசக்தி ஆகிய நான்கு மூலோபாயத் தூண்களில் கவனம் செலுத்துவதன் மூலம், எமது இளைய சமூகத்தின் திறமையையும், மூத்தவர்களின் அனுபவத்தையும், சர்வதேச மூலதனம் மற்றும் புத்தாக்கங்களுடன் இணைப்பதற்கான ஒரு வரைபடத்தை நாம் உருவாக்குகின்றோம்.

இன்று மேற்கொள்ளப்படும் முதலீடுகள், வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு பிரஜைக்கும் நிலையான வேலைவாய்ப்புகள், துடிப்பான தொழில் முயற்சிகள் மற்றும் செழிப்பானதொரு எதிர்காலத்தை உருவாக்குவதை உறுதி செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்.” – என்றார் ஆளுநர்.

விருந்தினர்கள் மங்கல வாத்தியங்களுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் மங்கல விளக்கேற்றப்பட்டது. வரவேற்புரையை ‘த மனேஜ்மன்ட் கிளப்’ – இலங்கைத் தலைவர் ரோஜர் தலயரத்னவும், உச்சிமாநாட்டின் நோக்கம் மற்றும் அறிமுக உரையை மாநாட்டின் செயற்றிட்டத் தலைவர் இந்திக கௌசால் ராஜபக்ஷவும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் கௌரவ இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், இலங்கைக்கான பிரிட்டன் மற்றும் மலேசிய உயர்ஸ்தானிகர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி, தென்னிந்தியாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவர், பிரதமரின் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபை ஆகியவற்றின் தலைவர்கள், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்வி மறுசீரமைப்புக்கு நிபுணர்கள் பொறிமுறை பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் இணைப்பு

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு









"கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட நிபுணர்களைக் கொண்ட பொறிமுறை நிறுவப்படும்." – என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்துடன் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

தற்போதுள்ள சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி, தேசிய கல்வி நிறுவகத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பின் மூலம், கல்வி மறுசீரமைப்புகளை செயல்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இங்கு எடுத்துக் காட்டினர்.

புதிய கல்வி மறுசீரமைப்புகளுக்கான தேவையை தமது சங்கம் ஏற்றுக்கொள்வதாகவும், நகர்ப்புற பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளை விட கிராமப்புற பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகள் தேவைப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கல்விச் மறுசீரமைப்புகளில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி தலைமையிலான அரசு எடுத்த முடிவைப் பாராட்டுவதாகவும், அதற்காக தமது ஆதரவுகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, பல்கலைக் கழக கட்டமைப்பில் விரிவுரையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் உள்ளிட்ட பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் கல்வியைப் பாதுகாக்க அரசு அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

பல்கலைக்கழக சட்டத்தின் திருத்தம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நிரம்பி வழியும் சிறைகள்

கால ஓட்டத்திற்கு ஏற்ப மற்றைய நாடுகளைப் போல இலங்கையும் புதிய புதிய குற்றங்கள், பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. போதைப் பொருள் வர்த்தகம், பாவனை, பாதாள உலகக் கும்பல்களின் மோசமான வன்முறை என்று வழமைக்கு மாறான புதிய குற்றங்கள், பிரச்சினைகளை நாடு சந்திக்கின்றது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய புதிய சட்டங்களை நாடு உருவாக்க வேண்டியும் இருக்கின்றது. அந்தச் சட்டங்களின் கீழ் குற்றம் இழைப்போரையும், சந்தேக நபர்களையும், தடுத்து வைத்து விசாரிக்கவும் தண்டிக்கவும் வேண்டிய ஏற்பாடுகளையும் நாடு செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகி வருகிறது.

இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக சட்டங்களை உருவாக்குவதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் தீவிர ஈடுபாடு காட்டும் நாட்டின் சட்ட - ஒழுங்கு நடைமுறைப்படுத்தல் தரப்பினர் அவர்களின் நடவடிக்கைகளினால் கைது செய்யப்படுவோர், தடுத்து வைக்கப்படுவோர், குற்றத் தண்டனைக்கு உள்ளாவோர் எண்ணிக்கை அதிகரிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளை உரிய முறையில் கவனிக்காமையால் புதிய பிரச்சினைகள் உருவாகி உள்ளன.

நாட்டின் முழுச் சிறைச்சாலை அமைப்பிலும் 300 வீதம் நெரிசல் ஏற்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

சிறையில் 37,761 கைதிகள் இருந்தாலும், அவர்களில் 27,000 பேர் சந்தேக நபர்கள் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் குற்றங்களுக்கான தடுப்புக்காவல்கள் அதிகரிப்பதே சிறைச்சாலை நெரிசலுக்கு முக்கிய காரணம் என்றும், அபராதம் செலுத்தும் நடைமுறையால் சிறைச்சாலை நெரிசல் குறையாது என்றும் அவர் கூறினார்.

போதைப்பொருள் தொடர்பான கைதிகள் மட்டும் சுமார் 27,000 பேர் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

போதைப்பொருள் தொடர்பான வழக்குகளை காலம் இழுபடாமல் விரைந்து முடிப்பதற்கான திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் கோடி காட்டியிருக்கின்றார்.

தடயவியல் அறிக்கைகள் வழங்குவது துரிதப்படுத்தப்பட்டால் இத்தகைய வழக்குகளை விரைந்து முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

தடயவியல் துறைக்கு 50 பேரை நியமிக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், அந்த 50 பேரைத் தவிர, மேலும் 32 பேரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எது, எப்படியோ, நிறைந்து வழியும் சிறைச்சாலைகளின் பிரச்சினையைச் சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் இச்சிக்கலைத் தீர்க்க முடியாது என்பதுதான் களநிலைவரம் ஆகும்.




# 16 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில்!

## 23 முதல் 25 வரை நடத்துவதற்கு ஏற்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

வட இலங்கையில் வணிகம், புத்தாக்கம் மற்றும் நிலைபேற்றியலை வலுப்படுத்தும் 16 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வட இலங்கையின் மிகப் பெரிய மற்றும் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் பன்முக வர்த்தகக் கண்காட்சியான யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வானது தொடர்ந்து 16 தடவையாகவும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. 2026 ஜனவரி 23 முதல் 25 வரை யாழ். முற்றவெளி மைதானத்தில் இது இடம்பெறவுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் மிகவும் நிலைபெற்றுள்ள வர்த்தக மேடையாக மாறியுள்ள இந்தக் கண்காட்சி வட மாகாணத்தின் மத்தியில் பொருளாதார மேம்பாட்டை முன்னேற்றி, வணிக தொடர்புகளை வளர்த்துத் தொழில்நுட்பத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதில் தொடர்ந்தும் முக்கிய பங்கு வகிக்கும்.

இலங்கையில் கண்காட்சி மற்றும் வர்த்தக நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதில் முன்னிலை வகிக்கும் அதே சமயம், ஜனாதிபதி விருதையும் வென்றுள்ள Lanka Exhibition & Conference Services (LECS) இன் ஏற்பாட்டிலும், யாழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடனும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி நாட்டில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் நிகழ்வுகளில் ஒன்றாக வளர்ச்சி கண்டுள்ளது.

தொழில் நேர்த்தி மற்றும் பல தசாப்தங்கள் நீண்ட தொழில்துறை நிபுணத்துவம் ஆகியவற்றுக்காகப் பெயர்பெற்று விளங்கும் LECS, உச்ச மட்ட பங்கேற்பு, பரந்தளவில் தேசிய தெரிநிலை, மற்றும் யாழ். குடாநாடு எங்கிலும் சீரான வகையில் JITF குறித்த ஊக்குவிப்பு எட்டுவதை உறுதி செய்யும் அதன் வலுவான வலையமைப்பு மற்றும் நன்மதிப்பு ஆகியன மிக வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்ற வட பிராந்திய சந்தையில் மூலோபாய நுழைவாயிலான இந்தக் கண்காட்சி வியாபாரிகள், முதலீட்டாளர்கள், மற்றும் நிறுவனங்களை தொடர்ந்தும் தன்பால் ஈர்த்து வருகின்றது.

வடக்கில் இடம்பெறும் மிகவும் விரிவான மற்றும் பெறுபேறுகளால் முன்னெடுக்கப்படுகின்ற வர்த்தகக் கண்காட்சியாக JITF மிகவும் வலுவாக நிலைபெற்றுள்ளது. இந்த ஸ்தானத்தை 2026 ஆண்டு நிகழ்வும் மீண்டும் வலுப்படுத்தவுள்ளது.

பலவகைப்பட்ட கைத்தொழில் துறைகள் மத்தியில் விரிவான தயாரிப்புக்கள் சேவைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட 400 கரும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்களை இந்தக் கண்காட்சி நிகழ்வு கொண்டிருக்கும். இலங்கை மிகவும் பிரகாசமான வாய்ப்புடன் சீராக விஸ்தரிப்படைந்து வருகின்ற பிராந்தியப் பொருளாதாரங்களில் ஒன்றின் அனுபவங்களை ஆராய விரும்புகின்ற உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், விநியோகத்தர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் புத்தாக்குநர்கள் போன்ற தரப்பினரை இந்த நிகழ்வின் பல்வகைப்பட்ட இறக்குமதியாளர்கள், கண்காட்சியாளர்கள் தளம் வெகுவாக ஈர்க்கின்றது.

# புங்குடுதீவு இறுப்பிட்டி அரியநாயகன் புலம் வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி அரியநாயகன் புலம் வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மகோற்சவ திருவிழாக்கள் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

09 ஆம் திருவிழாவான தேர் திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று 11 மணிக்கு விநாயக பெருமான் தேரில் ஆரோகணிப்பர்.

10 ஆம் திருவிழாவான மறுநாள் தீர்த்த திருவிழா நடைபெறும். அன்றைய தினம் காலை 09 மணிக்கு வசந்தமண்டப பூஜை இடம்பெற்று , கழுதைப்பிட்டி துறைமுகத்தில் சமுத்திர தீர்த்தம் இடம்பெறும். மாலை கொடியிறக்கம் இடம்பெற்று திருவிழாக்கள் இனிதே நிறைவு பெறும்.




# மருத்துவக் கட்டுரைக்கு சிறந்த விருதை மட்டு. துஷாரா பெற்றுக் கொண்டார்!

(அபு அலா)

இலங்கை பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்து இலங்கையின் ஆசிரியர்கள் சங்கம் வருடாந்தம் வழங்கி வருகின்ற 26 ஆவது தேசிய ரீதியிலான "சிறந்த பத்திரிகையாளர் விருது" EMPIRE BALLROOM MOUNT LAVINIA ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் திருமதி துஷ்யந்தி சுரேஸ், மட்டு. துஷாரா என்ற புனைப்பெயரில் தமிழன் வாராந்த "ஹெல்த்" சஞ்சிகையில் மருத்துவம் தொடர்பான கட்டுரைகளை கடந்த ஆண்டில் தொடராக எழுதிய சிறந்த பத்திரிகையாளர் என்ற விருதும், சான்றிதழும் பெற்றுள்ளார்.

இதனை வீரகேசரி பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியர் ஸ்ரீகஜன் வழங்கி வைத்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை நிறுவனத்தால் நடத்தப்பட்ட சிறந்த பத்திரிகையாளர் விருதின்போது, அவ்வாண்டிலும் சிறந்த மருத்துவ கட்டுரைகளை தொடராக எழுதி சிறந்த பத்திரிகையாளர் விருதை இவர் பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் வெள்ளியன்று மகாபாரத தொடர் அருளுரை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு 10.30 மணி தொடக்கம் இடம்பெறும்.



# மறவன்புலோ கிராமத்தில் பொங்கல் விழா நிகழ்வு!

(த.சுபேசன்)

தென்மராட்சி மறவன்புலோ கிராமத்தில் பொங்கல் விழா நிகழ்வு சனிக்கிழமை இடம்பெற்றது.

மறவன்புலோ அறநெறிப் பாடசாலை, சிறுவர் கழகம், சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச்சங்கம், கிராம அவிருத்திச் சங்கம் மற்றும் சமுர்த்திச் ஆகியவற்றின் பங்களிப்புடன் இடம்பெற்ற மேற்படி பொங்கல் நிகழ்வில் கலை நிகழ்வுகள்,விளையாட்டு நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்றன.

நிகழ்வில் மறவன்புலோ கிராம உத்தியோகத்தர் தர்மதுரை பவித்திரா, சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் த.தயாபரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெயபாலன், வள்ளக்குளம்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா க.சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# யாழ்ப்பாணமும் பொங்கலும்...!

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். வருடம் பிறந்து விட்டது என்றால் உலகமே அதனைக் கொண்டாடும். ஆனால் தமிழர்கள் மனதில் "தைப்பொங்கல்"தான் நினைவிலிருக்கும். அதைத்தான் தை மாதத்தின் முதல் நாள் என்று பார்ப்பார்கள். தமிழ் வருடப்பிறப்பு என்றே அதனைக் கூறிக் கொள்ளலாம்.

பொங்கல் வரப் போகின்றது. வீட்டைச் சுத்தம் செய்து கழுவ வேண்டும், பொங்கல் பொருட்கள் வாங்க வேண்டும், நேரத்துக்கு எழுந்து பொங்க வேண்டும் என்றெல்லாம் திட்டமிடுவார்கள்.

சூரியன், மாடுகள் மற்றும் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வகையில் கொண்டாடப்படுவதே தைப்பொங்கல் மற்றும் பட்டிப் பொங்கலாகும். விவசாயத்தைப் பொறுத்தவரையில் இவர்களின் பங்கு என்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அதற்காகவே உழவர் திருநாள் கொண்டாடப்படுகின்றது. பண்டைய மரபுகள் மற்றும் வழக்காறுகள் நிறைந்ததாகவும் பொங்கல் பாடல்கள் உள்ளடங்கியவையாகவும் பொங்கலானது அமையப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் விவசாயமும் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக நெற்பயிர்ச்செய்கை என்பது பிரதானமாகக் காணப்படுகின்றது.

அதிகாலைவேளை எழுந்து மாட்டின் சாணகத்தினால் மெழுகி, மா மற்றும் ஒடு இடித்த தூள் ஆகியவற்றால் கோலம் போட்டு, மஞ்சளால் சூரியனை வரைந்து, சுற்றிவர தோரணங்கள் கட்டி, அடுப்பு வைத்து பொங்கலைப் பொங்கிச் சூரியன் உதிக்கும் வேளையில் சூரியனுக்குப் படைப்பார்கள். சூரியனுக்குப் படைத்த பின்னர் வீட்டில் இருப்பவர்கள் பொங்கலை உண்பார்கள். அயல் வீட்டாருக்கும் பொங்கல் பரிமாற்றப்படும்.

உற்றார், உறவினர் என அனைவரும் ஒன்றாக இணைந்து பொங்கலைக் கொண்டாடுவார்கள். கோயிலுக்குச் செல்வார்கள்.

இங்கே சமூகத்துக்கிடையில் நல்லதோர் பிணைப்பு நிச்சயம் இருக்கும். அயல் வீட்டவர்கள் பொங்கலைப் பொங்குகின்றார்களோ இல்லையோ ஆனால் நிச்சயம் பொங்கலைப் பரிமாறிக் கொள்வார்கள். இது ஒரு சிறந்த சம்பிரதாயமாக அமைகின்றது. தமது வீட்டுப் பொங்கலை உண்பதை ஆர்வம் காட்டுவதை விட அயலவர்கள் தந்த பொங்கலை உண்பதில் ஆர்வமும் விருப்பமும் அதிகமாக இருக்கும். வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் கற்கண்டுப் பொங்கல் எனப் பல வகையான பொங்கலை அன்றுதான் ருசி பார்த்துக் கொள்ள முடியும். ஆனால் எல்லாப் பொங்கலையும் அன்றைய தினம் உண்பதற்கு முடியாமல் இருக்கும். ஆனால் ஒரு வாரம் கழிந்த பின் பொங்கல் சாப்பிட வேண்டும் போல தோன்றும். முதல் நாள் சூரியனுக்கும் மறுநாள் மாடுகளின் பட்டி பெருக வேண்டும் என்பதற்காகவும் அவர்களுக்கு நன்றி செலுத்தும் முகமாகவும் பட்டிப் பொங்கல் அமையப்பெறும்.



ரம்மியா புஸ்பகரன்.
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மாடுகளைக் குளிப்பாட்டி, பட்டுக் கட்டி, குங்குமம் வைத்து மாடு கட்டும் இடத்துக்கு அருகில் பொங்கலைப் பொங்குவார்கள்.



இன்றைய காலத்தில் பொங்கல் எப்படி இருக்கின்றது? எப்படிப் பார்க்கப்படுகின்றது? என்ற வினாக்கள் இருக்கின்றன. தற்பொழுது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பொங்கலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைச் சுற்றி வந்தாலே பார்த்துக் கொள்ள முடியும். தெருவோரங்கள் மற்றும் கடைகளில் கரும்புகள், பழங்கள் பல வண்ணங்களில் அமைந்த மண் பானைகள், வெடிகள் என அனைத்தும் நிரம்பியிருக்கும். அந்தளவுக்கு வரவேற்கின்றார்கள். மற்றவர்களை விட தமது பொங்கல் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக வேலைப்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடியும்.

முன்னரெல்லாம் யாழ்ப்பாணத்தில் நெருக்கமான குடியிருப்புகள் கிடையாது. நிச்சயம் முற்றம் என்பது இருக்கும். அவ்வாறிருக்கும் முற்றம் நிச்சயமாக மண் தரையாகவே இருக்கும். ஆனால் இன்று பெரும்பாலான வீடுகளில் மண் தரையையே காண முடிவதில்லை. அந்தளவிற்கு யாழ்ப்பாணம் வளர்ந்து விட்டது. அப்படி சீமெந்து நிலம் காணப்பட்டாலும் பொங்கலன்று அதில் சாணகத்தால் மெழுகுவதில்லை. சாணகத்தை அருவருப்பாகப் பார்க்கின்றார்கள். ஆனால் முன்னைய காலங்களில் வீட்டின் நிலம் முழுவதுமே சாணகத்தாலே மெழுகப்பட்டிருக்கும்.

இன்றைய காலத்தில் மா, ஓடு, மஞ்சள் என்பவற்றைப் பயன்படுத்தி கோலம் போடுவது இல்லை. "ரங்கோலி" வகையான இந்தியக் கலப்புக் கோலங்கள் வந்துவிட்டன. இன்றைய காலத்தில் ரீல்ஸ் எடுப்பதற்காகவே பொங்கலைப் பொங்குகின்றார்கள். இங்குதான் பண்பாடு என்பது கேள்விக்குறியாகின்றது. தாங்களும் பொங்கலைப் பொங்கி விட்டார்கள் என்று காட்டுவதற்காகப் பொங்குகின்றார்கள். பொங்கலைப் பொங்குவதற்கு ஒருவர், அதனைப் படம்பிடிப்பதற்கு ஒருவர் என பொங்கல் பொங்கும் படிமுறையே இங்கு மாற்றப்பட்டுள்ளது.

சூரியன் உதிக்கும் பொழுது பொங்கலைப் படைப்பதே உண்மையான சம்பிரதாயம். ஆனால் இன்று சூரியன் வந்த பின்னர் தான் பொங்குவதற்குத் தொடங்குகின்றார்கள். எந்தளவுக்கு மாறி இருக்கின்றது சமூகம் என்பதுதான் வியக்க வைக்கின்றது.

பொங்கலுக்கேற்ற பொங்கல் பாடல்கள் போடுவதில்லை. மாறாக சினிமாப் பாடல்களே போடப்படுகின்றன. பட்டிப் பொங்கல் என்று பார்த்தால் பெரும்பாலான வீடுகளில் மாடுகளே இல்லை. இயந்திர வருகையின் பின்னர் உழுவதற்கு மாடுகளைப் பயன்படுத்துவதில்லை. பாலைப் பெற்றுக் கொள்வதற்காகவே பெரும்பாலும் மாடுகளை வளர்க்கின்றார்கள்.

அயலவர்கள் பொங்கல் கொடுத்தால் மாத்திரமே இவர்களும் பதிலுக்குப் பொங்கலைக் கொடுக்கின்றார்கள். அவர்கள் பொங்கல் தந்து விட்டார்கள் அதனால் நாங்களும் கொடுக்க வேண்டும் என்ற மனநிலை காணப்படுகின்றது. அயல் வீட்டில் பொங்கல் பொங்கினார்களா? இல்லையா? ஏதேனும் பிரச்சினையா? என்று அவர்களின் நலனை விசாரிப்பதில்லை. அந்தளவுக்கு நெருக்கம் குறைந்துவிட்டது. இவர்களைப் பார்த்து தானே எதிர்காலத் தலைமுறையினரும் பின்பற்றப் போகின்றார்கள். இது எங்கு சென்று முடியப் போகின்றது என்பதுதான் தெரியவில்லை.



கௌசிகா ஜெகதீஸ்வரன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# உயிரின் ஆதாரமும் உலகின் எதிர்காலமும்

அன்றாட மனித வாழ்க்கையில் நீரின் தேவை இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. மனிதன் உயிர் வாழ்வதற்கும், அவனது உடலியல் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கும் நீர் அத்தியாவசிய வளமாகும். நீர் இல்லாமல் மனித வாழ்க்கை மட்டுமன்றி, புவியில் உள்ள அனைத்து உயிரினங்களின் வாழ்வும் சாத்தியமற்றதாகும். மனித வாழ்க்கையில் மட்டுமன்றி, விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, மின்சார உற்பத்தி, சுற்றுலா போன்ற பல்வேறு துறைகளிலும் நீர் அடிப்படை வளமாகப் பயன்படுகிறது.

இவ்வளவு முக்கியத்துவம் பெற்ற நீர்வளம் இன்றைய உலகில் மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது. குறிப்பாக மனிதன் பருகுவதற்கு ஏற்ற நன்னீரைப் பெற முடியாத நிலை பல நாடுகளில் நிலவி வருகிறது. எதிர்காலத்தில் நன்னீரைப் பெறுவதற்காக நாடுகளுக்கிடையே மோதல்கள், போர்கள், ஆக்கிரமிப்புகள் கூட ஏற்படக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை, “எதிர்காலத்தில் உலகில் நடைபெறும் மூன்றாம் உலகப்போர் நீருக்காகவே நிகழலாம்” என எச்சரிக்கும் அளவுக்கு, நன்னீர் இன்று குறைந்து வரும் ஒரு அரிய வளமாக மாறியுள்ளது.

நன்னீரை பாதுகாப்பதற்காக சர்வதேச ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும், நீர் மாசடைவைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே இன்றும் காணப்படுகிறது.

**புவியில் நீரின் நிலைகள் மற்றும் பரவல்**

புவியில் நீர் திண்மம், திரவம், வாயு என மூன்று நிலைகளில் காணப்படுகிறது. பனியாக திண்ம நிலையில், நதிகள், ஏரிகள், சமுத்திரங்கள் என திரவ நிலையில், நீராவியாக வாயு நிலையில் நீர் காணப்படுகிறது. திரவ நீரானது மேற்பரப்பு நீராகவும் (நதிகள், ஏரிகள், குளங்கள், சமுத்திரங்கள்) தரைக்கீழ் நீராகவும் (கிணறுகள், ஊற்று நீர்) காணப்படுகிறது.

புவியின் மொத்த பரப்பளவில் சுமார் 71% பகுதி நீரால் மூடப்பட்டுள்ளது. ஆனால் அதில் பெரும்பாலானது சமுத்திரங்களில் காணப்படும் உவர் நீராகும். மொத்த நீரின் சுமார் 97% உப்புநீராகவும், வெறும் 2.61% மட்டுமே நன்னீராகவும் உள்ளது. அந்தச் சொற்ப அளவிலான நன்னீரும் இன்றைய காலகட் டத்தில் மாசடைந்து வருவது மனித குலத்துக்கு மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது.

**மனித வாழ்க்கையில் நீரின் அவசியம்**

மனித உடலில் சுமார் 60-70% வரை நீரால் ஆனது. மனிதன் பருகும் நீர், உடலுக்குள் ஊட்டச்சத்துக்களைக் குருதிமூலம் கடத்துவதற்கும், உடல் வெப்பநிலையை கட்டுப்படுத்துவதற்கும், கழிவுப் பொருள்களை வெளியேற்றுவதற்கும் உதவுகிறது. அத்துடன் செரிமானம், சுவாசம், சுழற்சி போன்ற அடிப்படை உடலியல் செயற்பாடுகளுக்கும் நீர் இன்றியமையாததாகும்.

மேலும் சமையல், சுகாதாரம், சுத்தம், துவைப்பு, குடி தண்ணீர் வழங்கல் போன்ற அன்றாட நடவடிக்கைகளுக்கும் நீர் அவசியமாகிறது. குடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் பகுதிகளில் மக்கள் பல கிலோ மீற்றர்கள் தொலைவு சென்று நீரைப் பெற வேண்டிய நிலை காணப்படுகிறது. இது குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் ஆகியவற்றில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**இயற்கைச் சூழலில் நீரின் பங்கு**

மனித வாழ்க்கை மட்டுமன்றி, இயற்கைச் சூழல் தொகுதிகள் (Ecosystems) தொடர்ச்சியாக இயங்குவதற்கும் நீர் அவசியமாகிறது. குறிப்பாக நீரியல் வட்டச் செய்முறை (Hydrological Cycle) புவியில் தொடர்ச்சியாக இடம்பெறுவதாலேயே மழையைப் பெற முடிகிறது.

நீரியல் வட்டச் செய்முறையில் ஆவியாக்கம், ஒடுங்கல், பனிபடுதல், படிவுவீழ்ச்சி, கழுவு நீரோட்டம் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இந்தச் செய்முறைகள் முறையாக நடைபெறாவிட்டால் வறட்சி, வெள்ளம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகள்

தொடர்ச்சி▼

# உயிரின் ஆதாரமும் உலகின் எதிர்காலமும்

**தொடர்ச்சி▲**

உருவாகும். எனவே நீர் இயற்கை சமநிலையைப் பேணும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது.

**கைத்தொழில் மற்றும் பொருளாதாரத்தில் நீர்**

மனிதனால் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் நடவடிக்கைகளிலும் நீர் மிக முக்கிய பங்காற்றுகிறது. இரும்புருக்கு, சிமெந்து, காகிதம், இரசாயன உற்பத்தி, துணி உற்பத்தி போன்ற பெரும்பாலான கைத்தொழில்களில் நீர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்படுத்தப் படுகிறது.

உலகின் முன்னணி இரும்புருக்கு மையங்களில் ஒன்றான இந்தியாவின் ஜாம்செட்பூர் இரும்புருக்கு மையம் தாமோதர ஆற்றுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. இதுபோலவே வட அமெரிக்காவின் பேரேரிக் கரையோரங்களிலும் முக்கிய இரும்புருக்கு மையங்கள் அமைந்துள்ளன. இதன் காரணம், நீர் மூலமாக மூலப்பொருள்களை எடுத்துச் செல்லவும், உற்பத்தி செயற்பாடுகளுக்குத் தேவையான நீரைப் பெறவும் வசதியாக இருப்பது தான் எனலாம்.

அவை மட்டுமன்றி விமான கட்டுமானக் கைத்தொழில், கப்பல் கட்டுமானக் கைத்தொழில், மின்சார உற்பத்தி நிலையங்கள் (நீர்மின் நிலையங்கள்) போன்றவற்றுக்கும் நீர் அடிப்படை வளமாக் காணப்படு கின்றது.

**நீரை மையமாகக் கொண்ட கைத்தொழில்கள்**

சில கைத்தொழில்கள் முழுமை யாகவே நீரை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. மீன்பிடித் தொழில், உப்பு உற்பத்தி, சுற்றுலா கைத் தொழில் போன்றவை அதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

மீன்பிடித் தொழில் உலகின் பல நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக பசுபிக் சமுத்திரம் மற்றும் அத்திலாந் திக் சமுத்திரப் பகுதிகளில் பெருமள வான மீன்பிடி நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின்றன. வடகிழக்கு பசுபிக் பகுதி உலகின் மிகப்பெரிய மீன்பிடித்தளங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. ஜப்பான் போன்ற நாடுகள், தமது பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சமுத்திர மீன்பிடி நடவடிக்கைகளை விரிவு படுத்தி வருகின்றன.

மேலும் சுற்றுலாத் துறையில் நீர்விளையாட்டுகள், கடற்கரை சுற்றுலா, நீர்வீழ்ச்சி சுற்றுலா போன் றவை முக்கிய இடத்தைப் பெறு கின்றன. சமையலுக்குப் பயன்படும் சோடியம் குளோரைடு எனும் இரசா யனப் பெயருடைய கறியுப்பும் சமுத் திர நீரிலிருந்தே பெறப்படுகிறது.

அத்துடன் சமுத்திரங்கள் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்விடங்களா கவும், கப்பல் போக்குவரத்துக்கான பிரதான பாதைகளாகவும் விளங்கு கின்றன. இன்றைய உலகில் நாடுகளுக்கிடையேயான ஏற்றுமதி – இறக்குமதி வியாபார நடவடிக் கைகளில் கடல் போக்குவரத்தே மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

**நீர் மாசடைவும் அதன் விளைவுகளும்**

இவ்வாறு பல்வேறு தேவைக ளுக்கும் அடிப்படையாக விளங்கும் நீர், மாசடைந்தால் உலகம் முழுவ தும் பாரிய பிரச்சினைகள் உருவா கும். விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவை மழைநீரு டன் கலந்து நதிகள், ஏரிகள், தரைக் கீழ் நீர்நிலைகளில் சேருவதால் நீர் தனது தூய்மைத்தன்மையை இழக்கிறது.

மேலும் தொழிற்சாலைகளிலி ருந்து வெளியேற்றப்படும் திரவ மற்றும் திண்மக் கழிவுகள் பெரும் பாலும் நீர்நிலைகளில் கொட்டப் படுகின்றன. குறிப்பாக அணுக்கழி வுகள், கனரசாயனக் கழிவுகள், எண் ணெய்க் கழிவுகள் போன்றவை கடல்நீரை கடுமையாக மாசுபடுத்து கின்றன. இவை மனித உடலில் புற்றுநோய், மரபணு மாற்றம், கதிர் வீச்சு பாதிப்பு போன்ற கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. இதனால் நன்னீர் மட்டுமன்றி, கடல் நீர், தரைக்கீழ் நீர் என அனைத்து வகையான நீரும் மாசடைந்து வருகிறது.

**உலகளாவிய நீர்ப்பற்றாக்குறை மற்றும் எதிர்கால சவால்கள்**

நீர் மாசடைந்து வருவதும், மக்கள் தொகை அதிகரிப்பதும் காரணமாக உலகின் நீர்வளம் போதுமானதாக இல்லை. பல நாடுகளில் மக்கள் குடி தண்ணீருக்காக நீண்ட தூரம் சென்று நீரைப் பெற வேண்டிய நிலை காணப்படுகிறது. சில நாடுகள் சமுத்திர நீரைச் சுத்திகரித்துக் குடி தண்ணீராகப் பயன்படுத்தி வருகின் றன. ஆனால் இது அதிக செலவு மற்றும் தொழில்நுட்பத்தைத் தேவைப்படுத்தும் செயற்பாடாகும்.

தற்போது உலகில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இரண்டு பில் லியன் மக்களுக்கு மேல் கடுமை யான நீர்ப்பற்றாக்குறையை எதிர் நோக்கி வருகின்றனர். 2050 ஆம் ஆண்டில் உலகின் ஒவ்வொரு நான்கு நபரிலும் ஒருவர் நீர்ப்பற் றாக்குறையால் பாதிக்கப்படுவார் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.


**நீர்வளப் பாதுகாப்புக்கான சர்வதேச முயற்சிகள்**

இந்த நிலைமையை கருத்தில் கொண்டு, நீர்வளத்தைப் பாதுகாப் பதற்காக சர்வதேச ரீதியில் பல அமைப்புகள், உடன்படிக்கைகள், மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின் றன. 1992 ஆம் ஆண்டு அயர்லாந் தின் டப்ளினில் நடைபெற்ற மாநாடு நீர் மற்றும் நிலைப்பேண் அபிவி ருத்தி தொடர்பாக முக்கிய தீர்மா னங்களை முன்வைத்தது. 1990 ஆம் ஆண்டு இந்தியாவின் நியூடெல்லியில் நடைபெற்ற மாநாடு பாதுகாப்பான குடி தண்ணீர் மற்றும் உடல்நலம் தொடர்பான உலகளாவிய கலந்துரையாடலை முன்னெடுத்தது.

2000 ஆம் ஆண்டு நெதர்லாந் தின் ஹேக் நகரில் உலக நீர் மாநாடு நடைபெற்றது. மேலும் ஐக்கிய நாடுகள் சபை, 2005 முதல் 2015 வரையான காலப்பகுதியை "உயிர் வாழ்வுக்கு நீர்" என்ற சர்வதேச செயற்பாட்டு தசாப்தமாக அறிவித் திருந்தது.

இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும், நீர் மாசடைவைக் கட்டுப்படுத்துவது இன்னும் பெரும் சவாலாகவே உள்ளது.

ஆகவே, மனித வாழ்க்கை, இயற் கைச் சூழல், உலக பொருளாதாரம் ஆகிய அனைத்துக்கும் அடிப்படை யாக விளங்கும் நீர்வளம் இன்று ஆபத்தான நிலையை அடைந்துள் ளது. நீர் மாசடைவைக் கட்டுப்படுத் துதல், நீர்வளத்தை நிலைத்த முறையில் பயன்படுத்துதல், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத் துதல் ஆகியவை இன்றைய காலகட் டத்தின் அவசியமான கடமைகளா கும். நீர் இல்லையெனில் வாழ்க் கையே இல்லை என்ற உண்மையை உணர்ந்து, ஒவ்வொரு மனிதனும் நீரைப் பாதுகாப்பதில் பொறுப்பு ணர்வுடன் செயல்பட வேண்டும். அப்போதுதான் எதிர்கால தலை முறைகளுக்கு போதுமான நன்னீரை வழங்க முடியும். ■



# இலங்கையின் சனத்தொகை முதிர்ச்சி!

## (Ageing Population of Sri Lanka)

ஒரு நாட்டின் மனித வளம் என்பது அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். இலங்கையில் அண்மைக் காலமாக பிறப்பு வீதம் குறைந்து வரும் அதேவேளை, மருத்துவ மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களால் மக்களின் சராசரி ஆயுள்காலம் அதிகரித்து வருகின்றது. இதன் விளைவாக, நாட்டின் மொத்த சனத்தொகையில் முதியோர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதை 2024 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் 2012 ஆம் ஆண்டு 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 7.9 ஆக காணப்பட்டனர், இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் மதிப்பீட்டின் படி 12.6 ஆக அதிகரித்துள்ளது. இது சனத்தொகையில் சிரேஷ்ட பிரஜைகளின் அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது. அதே நேரத்தில் 15 வயதிற்கு குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டு 25.2 ஆக இருந்து 20.7 ஆகக் குறைவடைந்துள்ளது. இதனால் நாட்டில் வயது சமநிலை முதிர்நிலையை நோக்கி நகர்வதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு சிறுவர்களின் பிறப்பு வீதம் குறைவடைந்து, முதியர்களின் வீதம் அதிகரிப்பதானது நாட்டுக்குச் சவாலான விடயமாக இருந்தாலும் இதனைச் சாதமாக எதிர்கொள்வதற்கு ஏற்ற திட்டங்களை அறிந்து வைத்திருத்தல் ஒவ்வொரு தனிநபர்களதும், சமூகக் குழுக்களதும் கடைமையாகும்.

சிரேஷ்ட பிரஜைகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் அவர்களுக்குக்கான சுகாதார சேவைகளுக்கான செலவு அதிகரிக்கும், இவர்கள் அரச வேலைகளில் இருந்து 60 வயதில் ஓய்வு பெறுவதால் குறித்த நிறுவனங்களுக்குப் பணிச்சுமை ஏற்படும், அரசாங்கம் அவர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியம், முதியோர் நலத்திட்டங்களின் தொகை அதிகரிக்கும், முதியவர்களை பராமரிக்க தேவையான மனித வலுக்கள் அதிகமாக தேவைப்படுவதுடன் மாத்திரமல்லாது, முதியோர் பராமரிப்பு இல்லங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.



சௌந்தராஜன் துர்ஷாயினி,
மூன்றாம் வருடம், ஊடகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இவற்றை எவ்வாறு சமாளிப்பது, நாம் அனைவரும் என்றோ ஒரு நாள் முதியவர்களாக மாற வேண்டியவர்கள்தான் என்பதை முதலில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதனை விளங்கிக் கொண்டால் மாத்திரம்தான் முதியவர்களை கவனிக்கும் பக்குவத்தை நாம் பெறலாம். எம் ஒவ்வொருவரதும் குடும்பங்களிலும் வாழ்ந்து வரும் முதியோர்கள் காலத்தின் பொக்கிசங்கள், பல அனுபவங்கள், சிந்தனைகள், ஆளுமைகள் கொண்டவர்கள். எனவே அவர்களின் இருக்கும் ஆளுமை, திறமை, அனுபவங்களை நாமும் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அவர்களுடன் மனம்திறந்து எமது பிரச்சினைகளை கூறுவதன் மூலம் நல்ல முடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். அது மாத்திரமன்றி அவர்களுடன் நாம் மனம் திறந்து கதைக்கும்போது அது அவர்களும் ஒரு ஆறுதலாக அமையும்.

அதேபோன்று அரசு அவர்களுக்கு விசேட நலத்திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். அரச வேலையில் பணியாற்றி 60 வயதை அடைந்தும் தொழிற்படையில் பணியாற்றக் கூடியவர்களை ஒப்பந்த அடிப்படையிலோ, பகுதி நேர அடிப்படையிலோ இணைத்துக்கொள்ள வேண்டும். முதியோர்களுக்கான விசேட அடையாள அட்டைகளுக்கு சலுகைகளை வழங்க வேண்டும். முதியோர்களுக்காக சேவை நலன் மையங்கள் (Elder Care Centers) xsd, பராமரிப்பு மற்றும் தன்னார்வ சேவை அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

இலவச சுகாதார சேவைகள், மருத்துவ உதவிகள், நடமாடும் சேவைகள் (mobile medical clinics) போன்ற சேவைகளை விரிபடுத்த வேண்டும். முதியவர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள், புறக்கணிப்புக்களுக்கு எதிரான சட்டங்களை வலுப்படுத்த வேண்டும். முதியர்களுக்கு கடன் திட்டங்கள், விசேட வட்டிவீத அதிகரிப்பு போன்ற திட்டங்களை ஆரம்பிப்பதுடன் அவற்றை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். இவற்றுடன் மாத்திரமல்லாது முதியோர் தினத்தில் மாத்திரம் அல்லாது ஏனைய நாள்களிலும் அவர்களுக்கான விசேட செயற்பாடுகள், நிகழ்வுகள், விருதுகள், கௌரவிப்புக்கள் போன்றவற்றை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

சனத்தொகை என்பது தனியான ஒரு விடயமல்ல அது ஒரு நாட்டின் ஒட்டுமொத்த அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், வாழ்வியல் போன்ற அனைத்துத்துறைகளிலும் தாக்கம் செலுத்துகின்ற விடயமாகவே அமைகின்றது. நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு சிரேஷ்ட பிரஜைகளின் பங்கு அவசியமானது.

எனவே அவர்களிடம் காணப்படும் ஆளுமைப் பண்புகளைக் கொண்டு குடும்பங்களை முன்னேற்றுவதுடன், நாட்டின் வளர்ச்சிக்கும் பங்காற்ற முடியும்.

இலங்கை சனத்தொகையில் சிரேஷ்ட பிரஜைகளின் வளர்சியை நாம்சாதமாகபயன்படுத்துவோமாக இருந்தால் அது வளமான எதிர்காலத்தை நோக்கி எம் தேசத்தைக் கொண்டுசெல்லும்.




# கலை கலாசார நிகழ்வுகளுடன் திருமலை பிரதேச செயலக பொங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தைப்பொங்கல் நிகழ்வு இன்று கலை கலாசார நிகழ்வுகளுடன் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலக இந்து கலாச்சாரப் பிரிவு இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் பொங்கலுக்கான விசேட பூஜை வழிபாடுகளும் இடம் பெற்றன. விசேட பூஜையைப் பாரதிபுரம் முத்துமாரியம்மன் ஆலய பிரதம குருக்கள் பரப்பிரம்மஜோதி நடத்தினார்.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட சக உத்தியோகத்தர்களும் இணைந்து கொண்டனர். இதனை தொடர்ந்து பாரதிபுரம் அறநெறி பாடசாலை மாணவர்களின் தைப்பொங்கல் விசேட கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.









# கிளி. நெத்தலியாற்றுப் பகுதியில் இறந்த நிலையில் யானை மீட்பு!

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் கீழ் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் நெத்தலியாறு பகுதியில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்த யானை, பெரும்போக நெற்செய்கையை பாதுகாக்கும் நோக்குடன் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சிவனொளிபாத பாத மலைக்குச் சென்ற ஆறு பேரைக் குளவி கொட்டியது

(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளிபாத பாத மலைக்கு தரிசனம் செய்யச் சென்றோரில் ஆறு பேர் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று மதியம் இடம் பெற்றது.

இது குறித்து நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறுகையில், நல்லதண்ணி பகுதியில் அதிக



உஷ்ணம் நிலவிவரும் வேலையில் சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதியில் ரத்து அம்பலம் பகுதியில் உள்ள குளவி கூடு களைந்து கொட்டியுள்ளது.

வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவரும் உள்நாட்டு யாத்திரிகர்கள் ஐந்து பேர் அடங்கலாக ஆறு பேர் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்கள் ஆறு பேரையும் அவசர அம்பூலன்ஸ் ஊடாக மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர்.– என்றார்.



# ஆசிரியர் வாண்மை விருத்தி நூல் வெளியீட்டு நிகழ்வுகள்

**(றிபாஸ்)**

கல்முனை வலய கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் எழுதிய 'ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் ஆசிரிய ஆலோசகர்களின் தலைமைத்துவ வகிபங்கு' நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகள் கல்முனை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திட்டமிடலுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் வருண்யா சாந்தரூபன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இலக்கிய விமர்சகரும் ஆசிரிய ஆலோசகருமான ஜெஸ்மி எம். மூஸா நூல் மீதான உரையை ஆற்றியதுடன் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். றியாஸா, ஆசிரியர் வாண்மை மத்திய நிலைய பொறுப்பாளர் எம்.பதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நூலாசிரியரின் பணியை நயந்து ஆசிரிய ஆலோசகர் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

நூலின் முதற் பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளர் பெற்றுக் கொண்டார். நூலாசிரியரின் ஏற்புரையுடன் நிகழ்வு நிறைவுற்றது. ஆசிரிய ஆலோசகர் யூ.எஸ்.சபீல் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பில் இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் மொழி நூல் இதுவாகும்.



# இந்திய விமான நிலையத்தில் பிரிட்டன் வாழ் இலங்கையர் கைது!

## ஆள்மாநாட்டம் அம்பலமானது



இந்திய விமான நிலையத்தில் பிரித்தானியாவைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவின் பெங்களூரு விமான நிலையம் ஊடாக பயணிக்க முற்பட்ட வேளையில் 52 மற்றும் 25 வயதான இலங்கைத் தமிழர்கள் இருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் தனித்தனி டிக்கெட்டுகளில் பெங்களூரு கெம்பெகவுடா சர்வதேச விமான நிலையத்தின் 2 ஆவது முனையத்துக்குள் நுழைந்துள்ளனர்.

குடிவரவு மற்றும் பாதுகாப்புச் சோதனைகளைத் தனித்தனியாக முடித்த பிறகு, ஆண்கள் கழிவறையில் வைத்து லண்டன் போர்டிங் பாஸை மற்றவருக்கு இரகசியமாக வழங்கியுள்ளார்.

பிரித்தானிய பிரஜை விமான நிலையத்தில் இருந்த நிலையில், 25 வயதான மற்றைய இளைஞன் அவரின் போர்டிங் பாஸில் லண்டன் செல்லும் விர்ஜின் அட்லாண்டிக் விமானத்தில் ஏறியுள்ளார்.

இதனையடுத்து பெங்களூரில் இருந்து மீண்டும் இலங்கைக்கு திரும்புவதற்காக 8 மணிநேரம் விமான நிலையத்தில் பிரித்தானிய வாழ் இலங்கையர் காத்திருந்த நிலையில் பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் ஆள்மாறாட்ட மோசடி அம்பலமாகியுள்ளதுடன், இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் உடனடியாக லண்டன் விமான நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில், குறித்த 25 வயதான இளைஞன் தரையிறங்கிய நிலையில் அங்கு வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

# இந்தியப் படையின் விமானம் பிரயாக்ராஜ் அருகே விபத்து!



உத்தரப் பிரதேச மாநிலத்தில் இந்திய விமானப் படையின் விமானம் இன்று புதன்கிழமை விபத்துக்குள்ளானது என்று இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

பம்ரௌலி விமானப் படைத் தளத்துக்குச் சொந்தமான பறவைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் விமானமே இவ்வாறு பிரயாக்ராஜ் அருகே விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளாகும் போது அவசர பாராசூட் உதவியுடன் இரண்டு விமானப் படையின் அதிகாரிகளும் வெளியேறியதால் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

என்ஜின் செயலிழந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், முழுமையான விசாரணைக்கு விமானப் படை உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பயணித்த விமானத்தில் திடீர் கோளாறு!




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுவிட்சர்லாந்துக்குப் புறப்பட்ட விமானத்தில் திடீர் தொழிநுட்பகோளாறு ஏற்பட்ட நிலையில் தரையிறக்கப்பட்டது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றத்தில் கலந்துகொள்ள வெள்ளை மாளிகையிலிருந்து (Air Force One) விமானத்தில் புறப்பட்ட போது சிறிது நேரத்திலேயே விமானம் சிக்கலைச் சந்தித்துள்ளது.

இதன் காரணமாக விமானம் செயிண்ட் ஆண்ட்ரூஸ் விமானப்படை தளத்துக்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விமானம் பயணிக்கத் தொடங்கி ஒரு மணி நேரத்துக்குள் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விண்வெளி வீராங்கனையான சுனிதா நாசாவில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்!



விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் நாசாவில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நீதம் என்ற இடத்தில் பாடசாலை கல்வியை படித்த சுனிதா, புளோரிடாவில் பொறியியல் படிப்பை முடித்தார்.

அமெரிக்க கடற்படையில் விமானியாக சேர்ந்த சுனிதா வில்லியம்ஸை 1998 இல் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிநிறுவனமான நாசா அழைத்துக் கொண்டது.

27 ஆண்டுகள் நாசாவில் 2006ஆம் ஆண்டு முதல்முறையாக அவர் விண் வெளிக்குச் சென்றார்.

பின்னர் 2024 ஆம் ஆண்டு 59 வயதான சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோரும் (62) மற்றும் சில குழுவினருடன் போயிங் ஸ்டார்லைனர் என்ற விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

8 நாள்கள் தங்கி இருந்து பூமிக்கு திரும்ப வேண்டிய அவர்கள், போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அங்கேயே தங்கியிருந்துள்ளனர்.

286 நாள்களுக்குப் பின்னர் 2025 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பூமிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில், 27 ஆண்டுகள் நாசாவில் பணிபுரிந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் ஓய்வு பெறவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

# ஈரானில் அரசுக்கு எதிராகப் போராடிவரும் மக்கள் கைது செய்யப்பட்டுச் சித்திரவதை!

## பிரிட்டனைச் சேர்ந்த 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியீடு



ஈரானில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் அரசு கடும் குளிரில் அவர்களை ஆடைகளற்ற நிலையில் சித்திரவதை செய்கிறது என்று திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகி உள்ளது.

"முல்லா கண்டிப்பாகப் போ" என்ற கோஷத்துடன் ஈரானின் உயர்மட்ட தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு எதிராகப் பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதேவேளையில் போராட்டத்தைக் கட்டுப்படுத்த ஈரான் தொடர்ந்து முயன்று வருகிறது.

தற்போதுவரை 26 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள், பாதுகாவலர்கள் என்று மொத்தம் 5 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இருப்பினும் போராட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்த நிலையில்தான் கைது செய்யப்படுவோருக்கு சிறையில் துன்புறுத்தப்படுகின்றனர் என்று திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகியுள்ளது.

சிறையில் இருப்போர் நிர்வாணப்படுத்தப்பட்டுக் கடும் குளிரில் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்றும் சிலரின் உடலில் ஊசிகள் செலுத்தப்படுகின்றன எனவும் கூறப்படுகிறது.

அந்த ஊசி எத்தகையது? என்பது தெரியவில்லை எனவும் இது தொடர்பாக பிரிட்டனை சேர்ந்த டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், ஈரானில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி கைது செய்யப்பட்டு வருவோர் சிறையில் சித்ரவதை செய்யப்படுகின்றனர்.

கைதிகள் ஆடைகளை களைந்து உறைபனி போன்ற குளிர் சூழலில் துன்புறுத்தப்படுகின்றனர்.

நிர்வாணப்படுத்தப்படும் கைதிகளின் மீது சிறை அதிகாரிகள் குழாய் மூலமாக குளிர்ந்த தண்ணீரை பீய்ச்சி அடிக்கின்றனர். பல கைதிகளுக்கு திடீரென ஊசிகள் செலுத்தப்படுகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

பக்கங்கள் - 06

# கனடா முரசு

புதன்கிழமை 21/01/2026

## சீன வாகனங்களுக்கு அதிரடி வரி குறைப்பு



கனடா அரசு, சீனாவில் தயாரிக்கப் படும் மின்சார வாகனங்கள் மீது விதிக்கப் பட்டிருந்த 100 சதவீத

C3

# கனடா தனி நாடாக நீடிப்பதே அமெரிக்கர்களின் விருப்பம்!

## புதிய கருத்துக் கணிப்பில் வெளிப்பாடு கிரீன்லாந்து குறித்தும் அதே முடிவுதான்



கனடாவும் கிரீன்லாந்தும் சுயாதீனமாகவும் தன்னாட்சியுடனும் தொடர வேண்டும் என அமெரிக்கர்களின் பெரும்பான்மையினர் விரும்புகின்றனர் என புதிய கருத்துக்கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

ஜனவரி 13 முதல் 15 வரை 1,002 அமெரிக்கப் பெருநிலப் பகுதி குடிமக்களிடம் ஒன்லைன் முறையில் நடத்தப்பட்ட இந்தக் கணிப்பில், 66 சதவீதமானவர்கள் கனடா ஒரு சுயாதீன நாடாகவே தொடர வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

அதேபோல், 56 சதவீத மானவர்கள் டென்மார்க்கின் தன்னாட்சி பிரதேசமாக உள்ள கிரீன்லாந்து தனது தற்போதைய நிலையைத் தொடர வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

C2



# பிராங்கோபோன் குடியேற்றத்தில் கனடாவின் அதிரடி மாற்றம் முடிவு

கியூபெக் மாகாணத்திற்கு வெளியே பிரெஞ்சு மொழி பேசும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், 5,000 கூடுதல் நிரந்தர வதிவிட (PR) இடங்களை கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனவரி 19, 2026 அன்று மன்க்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், கனடாவின் குடிவரவு அமைச்சர் லீனா மெட்லெஜ் டயாப் இந்த புதிய ஒதுக்கீடு குறித்த விவரங்களை வெளியிட்டார்.

கனடாவின் பன்முகத்தன்மை மற்றும் மொழி வளத்தைப் பேணுவதற்கு இந்த நடவடிக்கை மிக முக்கியமானது

C2



# அமெரிக்காவைக் கடுமையாக எதிர்க்கும் கனடாவின் பிரதமர்

அமெரிக்க அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடுமையாகத் தாம் எதிர்க்கின்றார் என கனடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கிரீன்லாந்து மீதான அமெரிக்க வரிகளை கடுமையாக எதிர்ப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் கிரீன்லாந்துக்கு கனடா ஆதரவாக துணை நிற்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தில் (World Economic Forum) அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அழுத்தம் மற்றும் வரிகளை மூலமாகப் பயன்படுத்துவது குறித்து தெளிவான செய்தி அளித்தாலும், அமெரிக்கா அல்லது அமெரிக்க ஜனாதிபதியை கார்னி நேரடியாகக் குறிப்பிடவில்லை.

நடுத்தர சக்திகளான நாடுகளுக்கு தற்போது ஒரு சோதனை நேரிடுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களில், பெரிய சக்திகள் பொருளாதார ஒருங்கிணைப்பை ஆயுதமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனென அவர் தெரிவித்துள்ளார்.

வரிகள் மூலமாக அழுத்தம், நிதி அமைப்புகள் மூலம் கட்டுப்பாடு, விநியோக சங்கிலிகளைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் இடையூறுகள் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கார்னியின் 17 நிமிட முதன்மை உரை, பிரதமராக பதவி ஏற்றுக்கொண்ட பின் உலக பொருளாதார மன்றத்தில் அவர் வழங்கிய முதல் உரையாகும்.

நடுத்தர சக்திகளான நாடுகள் எப்படி 21 ஆம் நூற்றாண்டின் பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை கையாள வேண்டும் என்பதில் அவரது கருத்துக்கள் முக்கியத்துவம் கொண்டவையாக அமைந்தன.

## பிராங்கோபோன்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என அவர் குறிப்பிட்டார். 2025ஆம் ஆண்டில் கனடா நிர்ணயித்த பிராங்கோபோன் (குசயஉழிழநெ) குடியேற்ற இலக்கு வெற்றிகரமாக எட்டப்பட்டுள்ளது.

மொத்த நிரந்தர வதிவிடச் சேர்க்கையில் சுமார் 8.9 சதவீதம் பிரெஞ்சு மொழி பேசுபவர்களால் நிரப்பப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான இலக்குகளை கனடா பின்வருமாறு உயர்த்தியுள்ளது.

# 2026: 9 சதவீதம்

# 2027: 9.5 சதவீதம்

# 2028: 10.5 சதவீதம்

# 2029-க்குள்: 12 சதவீதம் (இலக்கு)

இந்த இலக்குகளை அடைவதற்காக கனடா அரசாங்கம் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

# எக்ஸ்பிரஸ் என்ட்ரி (Express Entry): பிரெஞ்சு மொழித் திறன் கொண்டவர்களுக்கென பிரத்யேகப் பிரிவு.

# பிராங்கோபோன் மொபிலிட்டி (Francophone Mobility): எளிதான வேலை அனுமதி வழங்கும் திட்டம்.

# மாணவர் முன்னோடித் திட்டம் (Student Pilot): சிறுபான்மை பிரெஞ்சு சமூகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சிறப்புப் பாதை.

# வரவேற்பு சமூகங்கள் (Welcoming Communities): புதிய குடியேறிகளை வரவேற்று ஒருங்கிணைக்கும் உள்ளூர் முயற்சிகள். கனடாவின் இந்த அறிவிப்பு உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது, பிரெஞ்சு மொழி பேசும் திறமையாளர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளையும், நிரந்தரக் குடியுரிமைக்கான எளிய வழிகளையும் உருவாக்கும் என குடிவரவு நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பல்வேறு மொழி பேசும் சமூகங்களை ஒன்றிணைப்பதன் மூலம் கனடாவின் பொருளாதார மற்றும் கலாசாரக் கட்டமைப்பை இது மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கனடா தனி நாடாக...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவை அமெரிக்காவின் ஒரு பிரதேசமாக அல்லது மாநிலமாக மாற்ற வேண்டும் என ஆதரித்தவர்கள் 17 சதவீதம் மட்டுமே எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிரீன்லாந்தை அமெரிக்க பிரதேசம் அல்லது மாநிலமாக மாற்ற வேண்டும் எனக் கூறியவர்கள் 23 சதவீதத்தினர் தான்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக்காலத்தில் விரிவாக்க (expansionist) அரசியல் நோக்கத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகிறார்.

கனடாவை அமெரிக்காவின் 51-ஆவது மாநிலமாக மாற்ற வேண்டும் என அவர் பலமுறை கூறியுள்ளமையுடன், தேசிய பாதுகாப்பைக் காரணமாக காட்டி கிரீன்லாந்தையும் இணைத்துக் கொள்ளும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கனடா, டென்மார்க் மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்றும் நேட்டோ (NATO) பாதுகாப்பு கூட்டணியின் நட்பு நாடுகளாக உள்ள நிலையில், கனடாவும் டென்மார்க்கும் ட்ரம்பின் இந்த விரிவாக்க முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.




# கனடாவில் குடும்பத்தவரைப் பறிகொடுத்தவரின் தந்தை, சகோதரருக்கு நிரந்தர வதிவிட அனுமதி



கனடாவில் வாழ்ந்துவந்த இலங்கையர் ஒருவர், தனது குடும்பம் முழுவதையும் வன்முறைக்கு இழந்து தவிக்கும் நிலையில், கனடா தரப்பிலிருந்து அவருக்கு ஒரு ஆறுதலளிக்கும் செய்தி கிடைத்துள்ளது.

இலங்கையரான தனுஷ்க விக்கிரமசிங்க என்பவர் அவரது மனைவியான தர்ஷனி ஏகநாயக (35), பிள்ளைகள் இனுக விக்ரமசிங்க (7), அஷ்வினி விக்கிரமசிங்க (4), ரனயா விக்ரமசிங்க (3) கெல்லி விக்கிரமசிங்க (2 மாதக்குழந்தை) ஆகியோர், கனடாவின் தலைநகரான முவவயறயவிலுள்ள டீயசசாயளநெ என்னுமிடத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வாழ்ந்து வந்தனர்.

கனடாவில் கல்வி கற்க வந்த இலங்கையரான ஃபெப்ரியோ டி ஸோய்சா (19) என்பவர் தனக்கு தங்க இடம் இல்லை என்று கூறிய போது, அவரை தன் வீட்டு அடித்தளத்தில் தங்கிக்கொள்ளச் சொல்லியிருக்கிறார் தனுஷ்க.

ஆனால், டி ஸோய்சா சரியாக படிக்காதமையால் தனது மாணவர் விசா ரத்தாகிவிடும், அதற்குப் பிறகு இலங்கையிலிருக்கும் தனது குடும்பமும் தனக்கு பணம் அனுப்பாது எனப் பயந்துள்ளார்.

ஆகவே, முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு, தனுஷ்க குடும்பத்தையும், அவர்கள் வீட்டில் தங்கியிருந்த அமர கோன் என்பவரையும் கொடூரமாக கத்தியால் குத்திக் கொலை செய்தார் டி ஸோய்சா.

தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட டி ஸோய்சாவுக்கு, ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கனடாவில் தன் குடும்பம் முழுவதையும் இழந்து தவித்துக்கொண்டிருந்த விக்கிரமசிங்கவுக்கு உதவுவதற்காக அவரது தந்தையும் சகோதரரும் கடந்த ஆண்டு கனடா வந்தார்கள். விக்கிரமசிங்கவுக்கு உதவுவதற்காக வந்த தாங்கள் புலம்பெயர்தல் சவால்களை எதிர்கொள்கின்றனர் எனக் கூறி, தங்களுக்கு ஃபெடரல் அரசு உதவவேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தார்கள்.

இந்நிலையில், விக்கிரமசிங்கவின் தந்தை மற்றும் சகோதரரின் நிரந்தரக் குடியிருப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர்களுடைய சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## சீன வாகனங்களுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி வரியை 6.1 சதவீதமாகக் குறைத்துள்ளது.

இதன் மூலம், இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகள் புதிய நிலைக்கு முன்னேறுகின்றன.

கனடா பிரதமர் மார்க் கார்னி, "நாங்கள் 49,000 சீன மின்சார வாகனங்களை 6.1 சதவீத சுங்கவரியுடன் அனுமதிக்கிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 70,000 யூனிட்டுகளாக அதிகரிக்கப்படும்" எனக் கூறியுள்ளார்.

மேலும், கனடா தனது சொந்த மின்சார வாகனங்கள் துறையை உருவாக்க, சீனாவின் விநியோகச் சங்கிலி மற்றும் தொழில்நுட்ப அனுபவத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முந்தைய நிர்வாகத்தின் கீழ், சீன மின்சார வாகனங்களுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருந்தது. இது, அமெரிக்காவின் சுங்கவரிப் போர் காரணமாக ஏற்பட்ட உலகளாவிய வர்த்தக நெருக்கடியின் ஒரு பகுதியாகும்.

தற்போது, கனடா மற்றும் சீனா வர்த்தக தடைகளை அகற்றி, புதிய மூலோபாய கூட்டாண்மையை உருவாக்க முயற்சி செய்கின்றன.

இந்த நடவடிக்கை, கனடாவில் மின்சார வாகன சந்தையை விரிவுபடுத்த உதவும் என நிபுணர்கள் கருதுகின்றனர். அதேசமயம், அமெரிக்காவின் சுங்கவரி கொள்கைகள், ப7 நாடுகளுக்கிடையிலான உறவுகளில் புதிய சிக்கல்களை உருவாக்கியுள்ளன.

இந்நிலையில், கனடாவின் இந்த முடிவு, சீன மின்சார வாகனங்கள் உற்பத்தியாளர்களுக்கு பெரிய வாய்ப்பாகவும், கனடாவின் பசுமை போக்குவரத்து இலக்குகளை அடைய முக்கியமான படியாகவும் பார்க்கப்படுகிறது.



# இந்த ஆண்டில் கடுமையான வெப்பநிலை கனடா சுற்றாடல் திணைக்களம் தெரிவிப்பு

அண்மைய உலக வெப்பநிலை அதிவேக உயர்வின் பருவம் 2026 இல் தொடர்ந்து நீக்கும் என கனடிய காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

விஞ்ஞானிகள் கணிப்பின்படி, இந்த ஆண்டின் உலக சராசரி வெப்ப நிலை, கைத்தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்த காலத்துடன் ஒப்பிடும்போது 1.44°C அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது 2024 ஆம் ஆண்டின் சாத னையான வெப்பநிலையை மிஞ்ச முடியாது என்ற போதிலும் 2023 மற்றும் 2025 போன்ற மற்ற வெப்ப மான ஆண்டுகளோடு ஒப்பிடும்போது அதே அளவிலேயே இவ்வாண்டும் இருக் கும்.

வானிலை மாதிரிகள் காட்டும் படி, 2026 முதல் தொடங்கும் அடுத்த ஐந்து ஆண்டுகள், பதிவு செய்யப்பட்ட வைகளில் மிக வெப்பமான காலம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடாவின் முன்னாள் நீதி அமைச்சர் வில்சன ரேபோல்ட்டுக்கு புற்று நோய்



கனடாவின் முன்னாள் நீதித்துறை அமைச்சர் ஜோடி வில்சன் – ரேபோல்ட், தமக்கு மார்பக புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான சிகிச்சையை விரைவில் தொடங்க உள்ளார் எனவும் தெரி வித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் வெளி யிட்ட பதிவில், அண்மையில் மேற் கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைக் குப் பிறகே இந்த சிகிச்சை தொடங் கப்பட உள்ளதாக அவர் கூறியுள் ளார்.

இந்த நிலைமை “பயமூட்டும் மற்றும் மனதை கலங்கடிக்கும் ஒன்று” என அவர் குறிப்பிட்டாலும், கடந்த ஆண்டு களில் பலர் தம்முடன் பகிர்ந்த தைரி யம் மற்றும் குணமடைந்த அனுபவக் கதைகளிலிருந்து தாம் வலிமை பெறு கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தமது அறுவை மருத்து வர்களுக்கும், பிரிட்டிஷ் கொலம்பியா புற்றுநோய் நிறுவனம் (BC Cancer Agency) வழங்கிய பராமரிப்பிற்கும் அவர் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

அதே பதிவில், பொதுமக்கள் தவறாமல் முறையான மார்பகப் பரிசோதனைகள் (mammogram) செய்து கொள்ள வேண்டும் என்றும், பிற புற்றுநோய்கள் மற்றும் உடல் நலக் கோளாறுகளுக்கான பரி சோதனைகளையும் அலட்சியப்படுத் தக் கூடாது என்றும் ஜோடி வில்சன் – ரேபோல்ட் வலியுறுத்தியுள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான முன்னாள் லிபரல் அரசில், மூன்று ஆண்டுகள் மத்திய அமைச்சரவை யில் பணியாற்றிய ஜோடி வில்சன் – ரேபோல்ட், அதன் பின்னர் பதவி விலகினார்.

2019 பொதுத் தேர்தலில், வான்கூவர் தொகுதியில் அவர் சுயேச்சை வேட்பாள ராகப் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவிலிருந்து ஆபத்து மிக்க பயணங்களை கனடாவிற்கு மேற்கொள்ளும் ஹைட்டி பிரஜைகள்!




அமெரிக்காவில் வசிக்கும் ஹைட்டி குடியிருப்பாளர்களிடமிருந்து தினமும் அச்சமடைந்த தொலைபேசி அழைப்புகள் வருவதாக, மான்ட்ரியலில் செயல்படும் குடியேற்ற ஆதரவு அமைப்பின் தலைவர் ஃப்ரான்ட்ஸ் ஆண்ட்ரே தெரிவித்துள்ளார்.

கனடாவுக்குள் வடக்கு எல்லையை கடந்துவரும் ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள முடியுமா எனப் பலர் ஆலோசனை கேட்கின்றனர் என அவர் கூறினார்.

அமெரிக்காவில் ஹைட்டி குடியிருப்பாளர்களுக்கான தற்காலிக பாதுகாப்பு அந்தஸ்து (Temporary Protected Status – TPS) திட்டம் அடுத்த மாதம் முடிவடைய உள்ள நிலையில், சட்டவிரோத எல்லைத் தாண்டல்கள் அதிகரிக்கும் என ஆண்ட்ரே எச்சரித்துள்ளார்.

தாம் பேசிக் கொண்டிருக்கும் இந்நேரத்திலேயே, சிலர் கனடாவுக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆவணமற்ற மக்களுக்கான செயல் குழுவை (Action Committee for People Without Status) சேர்ந்த ஹைட்டி வம்சாவளியுடைய கியுபெக் பிரஜையான ஆண்ட்ரே தெரிவித்தார்.

கிறிஸ்துமஸ் தினத்திலிருந்து இதுவரை, குவெபெக் மாகாணத்தில் குறைந்தது 27 ஹைட்டி வம்சாவளியுடைய குடியேறிகள், எல்லை பாதுகாப்புப் படைகளைத் தவிர்த்து கால்நடையாக எல்லை கடந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடும் குளிரில் பயணம் செய்ததால், பலர் நோய்களினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த குடியேறிகளில் சிலர் ஏற்கனவே அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்புத் துறையிடம் (U.S. Customs and Border Protection) ஒப்படைக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என கனடா எல்லை சேவை முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் செய்யப்பட்ட ஒப்பந்த மாற்றங்களின் காரணமாகவே, இவ்வளவு விரைவான நாடுகடத்தல்கள் சாத்தியமாகியுள்ளன என அதிகாரிகள் கூறுகின்றனர்.

# அவுஸ்திரேலியாவில் சடலமாக மீட்கப்பட்ட கனடிய பெண் அடையாளம் காணப்பட்டார்



ஆஸ்திரேலிய கடற்கரையில் உயிரிழந்து சடலமாக டிங்கோ நாய்கள் சூழ்ந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட கனடிய இளம்பெண் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பெண்ணின் மரணம், தங்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநில பொலிஸார் தெரிவிப்பதன்படி, 19 வயதுடைய இளம் பெண்ணின் உடல் மு'பயசுா எனப்படும் (முன்பு பிரேசர் தீவு) கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது.

அந்த உடல் சுமார் 10 டிங்கோ நாய்கள் கொண்ட கூட்டத்தால் சேதப்படுத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலிய ஊடகங்களில் பல, உயிரிழந்த பெண்ணை 'பைபர் ஜேம்ஸ்' (Piper James) என அடையாளம் காண்பித்துள்ளன.

உயிரிழந்த பெண்ணின் நெருங்கிய நண்பரான பிரியானா ஃபால்க் கூறுகையில், ஒரு கார் விற்பனை நிலையத்தில் தனது தினசரி பணியில் இருந்தபோது, ஆரம்ப கட்ட செய்தி அறிக்கைகளை பார்த்து தாம் மிகுந்த பதற்றத்தில் ஆழ்ந்தார் எனத் தெரிவித்தார்.

பின்னர், அந்த மரணச் செய்தியை குடும்பத்தினரிடமிருந்து அறிந்த ஒரு நண்பர் மூலம் தமது அச்சம் உண்மையென உறுதியாகியதாகவும் அவர் கூறினார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன், பிரிட்டிஷ் கொலம்பியாவின் கேம்பெல் ரிவர் நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளியின் ஆங்கில வகுப்பில் இருவரும் சந்தித்தனர் என ஃபால்க் நினைவுகூர்ந்தார்.

வாழ்க்கையை நேசிப்பவர், இயற்கையுடன் நேரம் செலவிட விரும்புபவர், எப்போதும் உரையாடத் தயாராக இருப்பவர் என்ற வகையில் தனது நண்பரை அவர் விவரித்தார்.

"எங்களுக்கு நிறைய திட்டங்கள் இருந்தன. அவள் மிகவும் இளம் வயதிலேயே உயிரிழந்துவிட்டாள்" என ஃபால்க் கூறினார். "இப்படியான சம்பவம் நமக்கு தெரிந்த ஒருவருக்கே நடக்கும் என்று நினைக்கவே முடியாது; அதிலும் என் மிக நெருங்கிய நண்பருக்கு நடக்கும் என்று கனவிலும் எண்ணியதில்லை" எனவும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

# கியுபெக் – ஒன்டாரியோ எல்லையில் நிலநடுக்கம்



கியுபெக் – ஒன்டாரியோ எல்லைப் பகுதிக்கு அருகே லேசான நிலநடுக்கம் உணரப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4.55 மணியளவில் பதிவான இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 2.8 மக்னிட்யூட் (ஆறு) அளவிலானதாகக் காணப்பட்டது.

இதனால் எந்தவித சேதமும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை எனவும், சேதம் ஏற்படும் வாய்ப்பும் இல்லை எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கியுபெக் மாகாணத்தின் பக்கிங்க் ஹாம், கெடினோ, ஒன்டாரியோ மாகாணத்தின் ஹாக்ஸ்பரி மற்றும் தலைநகர் ஒட்டாவா உள்ளிட்ட நகரங்களில் இந்த நிலநடுக்கத்தின் அதிர்வு உணரப்பட்டிருக்கலாம்.

இந்தப் பகுதி கடந்த சில தசாப்தங்களில் பல நிலநடுக்கங்களை எதிர்கொண்டுள்ளது.

அவற்றில் சில, ரிக்டர் அளவுகோலில் 5.0-ஐ கடந்த வலிமையுடன் பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிராந்தியத்தில் இதுவரை பதிவான மிகப் பெரிய நிலநடுக்கம், 1732 செப்டம்பர் 16 அன்று ஏற்பட்ட 5.8 மெக்னிட்யூட் அளவு நிலநடுக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடா, கிரீன்லாந்தை குறிவைத்து டிரம்ப் சமூக வலைதளங்களில் கிண்டல் பதிவு!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கனடா மற்றும் கிரீன்லாந்தை குறிவைத்து சமூக வலைதளங்களில் கேலி செய்யும் பதிவுகளை வெளியிட்டுள்ளார்.

டிரம்ப் ஒரு மாற்றியமைக்கப்பட்ட நாடுகளின் வரைபடத்தை பதிவிட்டார். அந்தப் படத்தில், கனடா மற்றும் கிரீன்லாந்து உட்பட வட அமெரிக்காவின் வரைபடத்தின் மீது அமெரிக்க தேசியக் கொடி போர்த்தப்பட்டிருப்பது காட்டப்பட்டுள்ளது.

ஓவல் அலுவலகத்தில் இருந்து டிரம்ப் அந்த வரைபடத்தை காட்சிப்படுத்தும் நிலையில், ஐரோப்பிய தலைவர்கள் அதைப் பார்ப்பது போல அந்த படம் அமைக்கப்பட்டுள்ளது.

டிரம்ப், கனடாவை அமெரிக்காவின் 51-ஆவது மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற தனது விருப்பத்தை பலமுறை வெளிப்படுத்தியுள்ளார்.

அதேபோல், தேசிய பாதுகாப்பை காரணமாகக் கூறி, டென்மார்க்கின் தன்னாட்சி பிரதேசமான கிரீன்லாந்தையும் இணைத்துக்கொள்ள தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். கனடா, டென்மார்க் மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்றும் நாட்டு பாதுகாப்பு அமைப்பான நேட்டோ கூட்டணியில் உள்ள நாடுகளாகும்.

எனினும், டிரம்பின் விரிவாக்க நோக்கங்களுக்கு எதிராக கனடாவும் டென்மார்க்கும் தெளிவாக மறுப்பு தெரிவித்துள்ளன. இந்த மாற்றியமைக்கப்பட்ட படத்தின் அசல் வடிவம் 2025 ஆகஸ்ட் 18 அன்று வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்டது.

அந்த அசல் படத்தில், உக்ரைன் வரைபடத்தை மையமாகக் கொண்டு, டிரம்புடன் இங்கிலாந்து பிரதமர் கியர் ஸ்டார்மர், இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லெயன், ஜெர்மன் சான்சலர் ஃப்ரிட்ரிக் மெர்ஸ், பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவல் மாக்ரோன், பின்லாந்து ஜனாதிபதி அலெக்சாண்டர் ஸ்டப், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி மற்றும் நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ருட்டே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.